மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக
தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

குறிஞ்சிக்கருத்தரங்கு- 05

வினாத்தாள் - II

நேரம்: 1மணி 15 நிமிடம்

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மட்டும்

இறுதிப் புள்ளிகள்	



பரீட்சைக்கு தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

உங்களுடைய பெயரையும் பாடசாலையையும் இந்த அடைப்புக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

பெயர் .....

பாடசாலை .....

.....

எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே தருக.

நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழே கோடு இடுக.

விடைகளை எழுத வேண்டிய வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

குறிஞ்சி ஆசிரியர்கள்

நிஸானா ஹில்மி
(B.ED,Dip.in.Teach)
0754549454

சனீ சுதர்சன்
(B.A,P.G.D.E,Dip.in.Teach)
071-8016757 , 077-3155022

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி மனதிற்கு இனிமையானது, மகிழ்ச்சிகரமானது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையைப் பந்தியில் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

01. சந்தையை நோக்கி வருபவர்கள் யார்? .....

02. இங்குள்ள அடுக்கு மொழியை எழுதுக? .....

03. உயர்திணை, நிகழ்கால, பன்மை , வினைச்சொல் எது? .....

04. பந்தியில் உள்ள இரட்டைக்கிளவி சொல்லை எழுதுக? .....

05. விடியற் காலையை எதிர்பார்த்திருந்தவர்கள் யார்? .....

06. பந்தியில் உள்ள இடப்பெயர்ச்சொல் ஒன்று எழுதுக? .....

(02) சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக. (06புள்ளிகள்)

01. கட்டடங்கள் / கட்டிடங்கள்

02. நிறுவனம் / நிருவனம்

(02புள்ளிகள்)

(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத்தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓) எனவும் பிழையாக எழுதப்பட்டிருப்பின் (✗) எனவும் வாக்கியத்திற்கு எதிரே உள்ள அடைப்புக்குள் இடுக.

01. நியூயோர்க் நகரம் மின்விளக்கொளியில் ஆழ்ந்தது. ( )

02. நாங்கள் எங்கள் மதிய உணவையும் பூங்காவிலே உண்டோம். ( )

03. தேயிலைச்செடிகள் பச்சைக்கம்பளம் விரித்தாற் போல் காணப்பட்டது. ( )

04. புறாக் கூட்டம் வலையில் சிக்கிக் கொண்டன. ( )

(04புள்ளிகள்)

(04) பின்வரும் பிராணியின் பெண் மரபுச்சொல்லை சொல்லை எழுதுக

01. குரங்கு - .....

(01புள்ளிகள்)

(05) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தந்துள்ள மரபுத்தொடர்களின் கருத்துக்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. கண்ணே கண்வளர்வாய் இங்கு கண்வளர்தல் என்பது ..... (விழித்தல், நித்திரை செய்தல்)

02. பிறரது முன்னேற்றம் கண்டு நாம் வயிற்றெரிச்சல் கொள்ளக்கூடாது. இங்கு வயிற்றெரிச்சல் என்பது ..... பெருந்துன்பம், பொறாமை)

(02புள்ளிகள்)

(06) பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற்குறியை இடுக.

01. நீ பாடம் படித்தாயா

(01புள்ளிகள்)

www.lkedu.lk

(07) பின்வரும் பாடலில் உள்ள இடைவெளியை பூரணப்படுத்துக.

சின்னஞ்சிறு வில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்

..... தோன்றுதம்மா

என்ன அதிசயம் பாராயம்மா ஈதோர்

..... (01புள்ளிகள்)

(08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

01. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன் ..... (அரசியல் வாதி , வேட்பாளர்)

02. நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்

என்னும் கவிதையில் நன்றியை மறந்தவர்களுக்கு கூறப்பட்ட உவமானமாக .....
(கல்மேல் எழுத்து, நீர் மேல் எழுத்து) கொள்ளப்படுகின்றது. (02புள்ளிகள்)

(09) பின்வரும் பழமொழிகையைப் பூர்த்திசெய்க.

01. விளையும் பயிரை ..... (01புள்ளிகள்)

(10) பொருத்தமான ஒலி வேறுபாட்டு சொல்லின் கீழ் கோடிடுக.

01. .....(அல்லி / அள்ளி) மலர்கள் மரத்தில் நிறைந்திருந்தன.

02. ..... (கலை / களை) மானும், பினைமானும் ஆற்றில் நீர்பருகின. (01புள்ளிகள்)

(11) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக,

01. அதிபர் ..... 02. நீர்வீழ்ச்சி .....

(12) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக. (02புள்ளிகள்)

01. I love my School.....

(13) ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை கூட்டுக்குள் இருந்து தெரிவு செய்து அதனை புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. I will clean ..... black board

02. I have ..... blue pen

the		a	
	are		is

(02புள்ளிகள்)

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக

01. අපි පාසලට්ට යමු.....

(15) பின்வரும் சொல்லை சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக. (01புள்ளிகள்)

01. වගුප්පාසිරියර් .....

(01புள்ளிகள்)

www.ikedu.lk

(16) சுத்தம் சுகம் தரும் என்பது முதுமொழியாகும். அதற்கேற்ப ***"நாம் சுத்தம் பேணுவதால் எமக்கு கிடைக்கும் நன்மைகள்"*** *என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)*

- .....

.....

- .....

.....

.

- .....

.....

(06புள்ளிகள்)

கணித வினாக்களுக்கு விடை தருக.

17. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக?

66006 .....

18. தரப்பட்டுள்ள இரு உரோமன் எண்களையும் கூட்டி விடையை உரேமன் குறியீடுகளில் தருக?

xi + viii = ...

19. நான்கு நண்பர்கள் சேர்ந்து ஒவ்வொருவரும் ஆளுக்கு ரூபா 80 வீதம் இட்ட தொகையில் $\frac{2}{8}$ பங்குக்கு பழங்களை வாங்கி பின் எஞ்சும் தொகையை தம்மிடையே சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர்.

1) பழங்கள் வாங்குவதற்கு செலவிட்ட தொகை எவ்வளவு? .....

2) நண்பர் ஒருவர் பெற்றுக் கொண்ட பணத்தின் பெறுமதி யாது? .....

*20. கொழும்பிலிருந்து பயணிக்கும் ஒரு பேருந்து மணிக்கு 80*km *மாறா கதியில் பயணிக்கும்.*

*இப்பேருந்து மு.ப 9.30 மணிக்கு பயணத்தை தொடங்கி 260*km *தூரத்தை ஓடிய பின் கண்டியை அடைந்தது. இப்பேருந்து கண்டியை அடைந்த நேரத்தை இலக்கக்கடிகார நேரமாக எழுதுக?*


.....

21. பெட்டியினுள்ளே உள்ள எண்களில் 3 இனாலும் 4 இனாலும் மீதியின்றி வகுப்படக் கூடிய எண்ணை தெரிவு செய்து எழுதுக?

.....

348	*567*	
	832	*686*

22.



இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

.....

www.ikedu.lk

23. மோட்டர் சைக்கிள் ஒன்று பயணம் தொடங்கும் போது 8*l* 500*ml* எரிபொருள் இருந்தது பயணம் முடிவடைந்த போது எஞ்சியிருந்த எரிபொருளின் அளவு 4*l* ஆகும். பயணத்திற்கு செலவளித்த எரிபொருளின் அளவு யாது? .....


24. 3*l* 750*ml* குளிர்பானத்தை ஒவ்வொன்றும் 250 மில்லிலீற்றர் கொண்ட எத்தனை சிறிய போத்தலில் ஊற்ற முடியும்? .....

25. 2018ஆம் ஆண்டு மணிவிழாவைக் கொண்டாடிய பாரதி வித்தியாலயம் 75வது ஆண்டு விழாவை எந்த ஆண்டில் கொண்டாடும்.?.....

26. சமனான அடிகளைக் கொண்ட 6 சதுரப்பக்கங்களினால் மாத்திரம் ஆக்கப்படும் திண்மத்தின் பெயர் யாது? .....

27. கோட்டுப்படத்தின் உதவியுடன் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடையை எழுதுக.

இருந்து	வரைக்கும்	தூரம்
கொழும்பு	கண்டி	116km
கொழும்பு	கேகாலை	77km
வரக்காபொல	கண்டி	60km
வரக்காபொல	கேகாலை	.....




28. 2016 ஆம் ஆண்டின் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தரம் 5 மாணவர்களால் தமது பாடசாலை தோட்டத்தில் நடப்பட்ட மரக்கறி வகைகள் தொடர்பான தகவல்கள் இவ் வரைபில் காட்டப்பட்டுள்ளன.


1) நடப்பட்டுள்ள கத்தரி செடிகளின் எண்ணிக்கை வெண்டி செடிகளின் மற்றும் தக்காளி செடிகளின் மொத்த எண்ணிக்கையில் அரைவாசியாகும் அதனை வரைபில் வரைந்து காட்டுக.

2) மிகக் குறைந்தளவில் நடப்பட்டுள்ள காய்கறி வகை எது? .....

3) நடப்பட்டுள்ள மொத்த காய்கறி வகைகளின் எண்ணிக்கை எவ்வளவு? .....



www.lkedu.lk

29. 

1) இவ் உருவில் $\frac{2}{4}$ நிழற்றிக்காட்டுக

2) $\frac{2}{5}$ இன் சமவலுப்பின்னத்தை எழுதுக? .....

30. ஒரு கடையில் 3kg பருப்பு, 10 முட்டைகள் வாங்குவதற்கு கமலாவுக்கு ரூபா 480.00 செலவானது. அக்கடையில் 1kg 500g பருப்பு , 5 முட்டைகள் வாங்கிய பாத்திமா ரூபா 500.00 ஐ கடைக்காரருக்கு வழங்கினாள்.

1) 1kg 500g பருப்பு , 5 முட்டைகள் ஆகியவற்றின் விலை என்ன?.....

2) பாத்திமாவுக்கு கிடைத்த மீதிப்பணம் எவ்வளவு? .....

31 - 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன்கீழ்க்கோடிடுக.

31. ஐந்து இதழ்களைக்கொண்ட பூ

1) மல்லிகை 2) நித்தியகல்யாணி 3) போகன்விலா 4) வெட்சி

32. செடியில் காய்ப்பது

1) பயற்றை 2) பாகல் 3) வற்றாளை 4) வெண்டி

33. உடல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது

1) கடலை, கோதுமை 2) முட்டை , வாழைப்பழம்

3) பாண், மீன் 4) பயறு , முட்டை

34. இலங்கைக்கு உரித்தான முலையூட்டி விலங்கு,

1) மரத்தேரை 2) கோழிக்கொண்டை 3) நரைப்புளுணி 4) சுண்டெலி

35. கண்டிய நடனக்கலைஞனின் உருவப்படம் அச்சிடப்பட்டுள்ள இலங்கை தாள்காசு எது?

1) ரூபா 20.00 2) ரூபா 500.00 3) ரூபா 50.00 4) ரூபா . 100.00

36. காந்தம் கவராத பொருள் எது?

1) குண்டூசி 2) கை ஊசி 3) பித்தளை தகடு 4) இரும்பாணி

37. தரையில் வேகமாக ஓடுகின்ற விலங்குகளை வேட்டையாடாத பிராணி எது?

1) முயல் 2) சிறுத்தைபுலி 3) மான் 4) கரடி

38. 2018ஆம் ஆண்டு உலக காற்பந்தாட்டப் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது

1) பிரேசில் 2) பிரான்ஸ் 3) ரஷ்யா 4) கட்டார்

39. சித்திரை புதுவருடக்காலத்தில் ஓசை எழுப்பக்கூடிய விலங்கு எது?

1) கோழி 2) குயில் 3) காகம் 4) பூனை

www.lkedu.lk

40. தேசியக்கொடியில் நான்கு மூலைகளிலும் காணப்படுகின்ற இலைகள் எந்த தாவரத்தின் இலைகளாகும்

1) மாரை 2) ஆல் 3) கொன்றை 4) அரசு

41. தபால் பெட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பது

1) திறந்து வைத்தவரின் பெயர் 2) கடிதம் கொண்டிருக்க வேண்டிய நிறை

3) கடிதங்களை எடுக்கும் நேரம் 4) கடிதங்களை எடுக்கும் திகதி

42. தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்த வரலாற்று சாதனைக்குரிய பொருள்

1) தொலைபேசி 2) மின்குமிழ் 3) மின்மணி 4) மின்சூள்

43. உணவு பழக்கவழக்கங்களில் சிறந்தது.

1) உரிய நேரத்திற்கு உணவு உண்ணல்

2) இனிப்புச்சுவையுள்ள உணவுகளை உண்ணல்

3) மாமிச உணவுகளை தவிர்த்தல்

4) மரக்கறிகளை குறைத்து மா உணவுகளை உண்ணல்

44. மேசன் பயன்படுத்தும் உபகரணங்களை மாத்திரம் கொண்ட விடை

1) மணியாசு, தூக்குக்குண்டு, பரம்புப்பலகை

2) பட்டடை, மூலைமட்டம், நீர்மட்டம்

3) தூக்குக்குண்டு, நீர்மட்டம், மணியாசு

4) மணியாசு, மட்டப்பலகை, அத்தாங்கு

45. மரத்தைத் துளைத்து தனது வாழ்விடத்தை அமைத்துக்கொள்வது

1) ஆந்தை 2) மைனா 3) மரங்கொத்தி 4) மீன்கொத்தி

46. பாடசாலை மாணவர்களுக்கு பெரிதும் உதவக்கூடிய ஓர் ஊடகம்

1) வானொலி 2) மின்னஞ்சல் 3) பத்திரிகை 4) தொலைபேசி

47. நக்கிள்ஸ் மலைத்தொடர் காணப்படுவது


1) வடமத்திய மாகாணம் 2) மத்தியமாகாணம்


3) வட மாகாணம் 4) சப்ரகமுவ மாகாணம்


48. அரச இலச்சினையில் சௌபாக்கியத்தை குறித்து நிற்பது

1) பூவிதழ் 2) நெற்கதிர் 3) புன்கலசம் 4) வாளேந்திய சிங்கம்

49.முன்னால் சுற்று வளைவைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உரு எது?

1) 

2) 

3) 

4) 

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

50. டங்கன் வைட் ஒலிம்பிக் போட்டியில் எந்த விளையாட்டில் கலந்து கொண்டு வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்?

1) 100m ஓட்டப்போட்டி
2) தடைத்தாண்டல் போட்டி
3) 400m ஓட்டப்போட்டி
4) நீச்சல் போட்டி

51. மொனாலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?

1) ஜோர்ஜ் கீட்
2) சார்ல்ஸ் பபேஜ்
3) ரவி வர்மா
4) லியனா - டோ - டாவின்சி

52 மின்னேரி தெய்வம் என மக்களால் போற்றப்பட்ட மன்னன் யார்?

1) தாதுசேனன் 2) வசபன் 3) மகாசேனன் 4) பண்டுகாபயன்

53. சுதந்திர மந்திரம், சுதந்திர தியானம் ஆகிய புத்தகங்கள் வாயிலாக தேசப்பற்றை வளர்க்க உதவியவர்?

1) வண. எஸ். மஹிந்த
2) டி. பி. ஜயதிலக்க
3) ஆனந்த குமாரசுவாமி
4) கொங்காலேகொடபண்டா

54. இலங்கை தேசப்படத்தில் வனப்பரம்பல் மற்றும், சரணாலயங்களை குறித்துக்காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம்?

1) சிவப்பு 2) பச்சை 3) மஞ்சள் 4) நீலம்

55. காற்று மூலம் பரம்பலடையும் வித்துக்களை கொண்ட விடை

1) இறப்பர், குன்றிமணி, அச்சி
2) எருக்கலை, அச்சி, வேங்கை
3) பொன்னொச்சி, அச்சி, மஞ்சாடி
3) எருக்கலை, சீதேவியார் செங்களுநீர், இறப்பர்

56. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றிய வருடங்களின் ஒழுங்கு முறையே,

1) கி.பி. 1505, கி.பி. 1568, கி.பி. 1815
2) கி.பி. 1505, கி.பி. 1658, கி.பி. 1796
3) கி.பி. 1505, கி.பி. 1658, கி.பி. 1815
4) கி.பி. 1658, கி.பி. 1676, கி.பி. 1748

57. பின்வரும் உடுக்கோலங்களில் குறைவான எண்ணிக்கையில் நட்சத்திரங்கள் அமைந்த உடுக்கோலம் எது?

1) விருச்சகம் 2) கலப்பை 3)கார்த்திகை 4) தென்சிலுவை

58‘‘ கோண கோண மலையேறி ’’ என்ற நாட்டார் பாடலில் எந்த பயிர் வகைப்பற்றி குறிப்பிடப்படுகின்றது.

1) தேயிலை 2) கோப்பி 3) கொக்கோ 4) மிளகு

59 வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் ஆகிய நோய்களுக்குக் காரணம்?

1) நுளம்புகளின் பெருக்கம்
2) ஈக்களின் பெருக்கம்
3) அசுத்த நீரின் பாவனை
4) எலிகளின் பெருக்கம்

60. சூரிய நமஸ்கார செயற்பாட்டில் இரண்டாவது செயற்பாடு எது?

1) 
2) 
3) 
4) 

(03புள்ளிகள்)

www.ikeduk.lk